மதத்தின் குரல்வளை நசுக்கி நெரிக்கப்படுகிறது!

—(0)—

கம்யூனிஸ்டு சீனாவில் கிறிஸ்துவ குருமார் தெருப் பெருக்குகின்றனர்!

—(0)—

கன்னியாமடந்தைகள் தாதிமாராகும் 'பரிதாபம்'!

குருட்டு நம்பிக்கைகள் வேரறுக்கப்படுகின்றன

வத்திகான் ஓலம்: ராய்ட்டரின் கண்ணீர்!

Regd. No. M. 5458

விலை அணா ஒன்று] [இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (21—1—50) ❁ வெளியூர் (22—1—50) [இதழ் 148

'கம்யூனிஸ்டு சீனாவில் கிறிஸ்துவ சமயப் பிரசாரகர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்ற பெயரில் ராய்ட்டர் செய்தி நிலையம் பற்பல செய்திகளை எடுத்துக்காட்டி, ஏதேதோ கூறியிருக்கிறது. உண்மையான செய்திகள் இவையிவை யென்பதை யெடுத்துக்காட்டுவதே செய்தி நிலையமொன்றின் தலையாய கடமையாயிருக்க, இச் செய்தி நிலையம் ஆங்காங்கே அவ்வப்போது தனது 'விமர்சனங்களை' யும் தந்துரைக்கத் தவறவில்லை. 'ராய்ட்டரின்' விமர்சன உரைகளை விலக்கி, செய்திகள் என்று தோன்றுவனவற்றை மட்டும் வாசகர்களின் பார்வைக்குக் கீழே தருகிறோம்.

கம்யூனிஸ்டு சீனாவில்இன்று பல நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ குருமார்களும் கன்னியாஸ்திரிகளும் விவசாயிகளாகவும், தாதிமார்களாகவும் தெருப்பெருக்கும் தொழிலாளர்களாகவும் தங்களுடைய வாழ்க்கையைநடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சீனாவிலிருந்தும் மஞ்சூரியாவிலிருந்தும் வத்திக்கானுக்கு எட்டும் செய்திகளில் மேலும் அடங்கியிருக்கும் தகவல்களாவது:— "சில கிறிஸ்தவ குருமார்கள் தங்களுடைய ஸ்தாபனங்களில் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்களென்பது உண்மைதான். ஆனால் அவர்கள் சரீர உழைப்பு வேலைகளைச் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். சிலர் விவசாயத்துக்கோ, அல்லது கால்நடை வளர்ப்புப் பண்ணைகளுக்கோ செல்கின்றார்கள். வேறு சிலர் ரஸ்தா தொழிலாளர்களாகவும், பரந்தச்சர்களாகவும் வேலை செய்கின்றனர்.

எவரையும் சமயற்காரராகவோ (வினா விடை மூலம் பாதிக்கும்) உபதேசியராகவோ,அல்லது பணியாளராகவோ வேலைக்கமர்த்திக்கொள்ளக் கிறிஸ்தவ குருமார்களுக்கு அனுமதியில்லை. கிறிஸ்தவ சமயத் தூதர்கள் தொண்டர்களின் உதவியையும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். ஏனென்றால், அது "மக்களைச் சாண்டுவதாகும்" என்று கூறப்படுகிறது.

திருச்சபைகளின் சொத்துக்கள் நடத்தப்படும் விதம் ஜில்லாவுக்கு ஜில்லா வித்தியாசப்படுகிறது. பெரிய நகரங்களிலுள்ள கத்தோலிக்கக் கட்டிடங்களில் சில ஒன்றுஞ் செய்யாமல் அப்படியே விடப்பட்டிருக்கின்றன. ஆனால் சிறிய நகரங்களிலும், கிராமங்களிலுமுள்ள தேவாலயங்களும், கத்தோலிக்கப் பாடசாலைகளும் கம்யூனிஸ்டு தலைமைக் காரியாலயங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் தேவாலயம் பண்டகசாலையாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

கிறிஸ்தவ சமயப் பிரசார நிலையங்கள் மீது அளவுக்கு மீறிய வரிகள் விதிக்கப்படுகின்றன. இதனால் அவற்றில் அநேகம் தங்களுடைய பணிகளைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலையிலிருக்கின்றன."

கம்யூனிஸ்டு சீனாவின் "இரும்புத் திரையை"க் கிழித்துக்கொண்டு ரோமாபுரியிலுள்ள வத்திக்கான் சமயப் பிரசாரத் தலைமைக் காரியாலயத்துக்கு எட்டும் செய்திகள் கூறுவதாவது:— "மதத்தைக் கௌரவிப்பதே சர்க்காரின் நோக்கமென்று கம்யூனிஸ்டுகள் பிரகடனம் செய்திருந்த போதிலும், வெளிநாட்டு சமயப் பிரசாரகர்களுக்கு அவர்களுடைய வேலையில் கஷ்டங்கள் நாடோறும் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன."

கிறிஸ்தவ சமயப்பிரசார நிலையங்கள் சம்பந்தமாக சீனாவிலுள்ள கம்யூனிஸ்டுகள் நடந்துகொள்ளும் விதத்தில் முரண்பாடுகள் நிறையக் காணப்படுகின்றன. ஒரு பக்கத்தில் மதத்துக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது இன்னொரு பக்கத்தில் மதத்தின் மீது அடக்குமுறை பாணங்கள் ஏவப்படுகின்றன.

கீழ்த்தர அதிகாரிகள்தான் சொந்தக் குரோதத்தின்பேரில் கிறிஸ்தவ சமயப்பிரசாரகர்களைத் துன்புறுத்துகிறார்களே ஒழிய மேலதிகாரிகளெல்லாம் இவர்களுக்குத் தக்கப் பாதுகாப்பு அளித்துக்கொண்டுதானிருக்கிறார்களென்று கருதுவது தவறு. ஏனென்றால் 'வெளிநாட்டினர் சீனாவுக்குள் புகுத்திய குருட்டு நம்பிக்கைகளைப்'' படிப்படியாகவேரறுப்பதே தங்கள் நோக்கமென்று கம்யூனிஸ்டுகள் முறைப்படி வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்கள். மேலதிகாரிகள் கிறிஸ்தவ சமயத் தூதுவர்களைப் பாதுகாப்பதுபோல் பாசாங்கு செய்வதும் கீழதிகாரிகள்

தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க

பங்கீட்டுக்கடைகளைக் கவனிக்க பொதுமக்கள் கமிட்டிகள்

—(0)—

மாகாணங்களுக்கு மத்திய சர்க்கார் யோசனை

புது டில்லி, ஜன. 20—

பங்கீட்டுக் கடைகளில் பொது மக்களுக்குக் கொடுக்கப்படும் உணவுத் தானியங்கள் உயர்தரமானவையாக இருக்கும்படி கவனித்துக் கொள்வதற்காக, பங்கீட்டுக்கடை வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு இடத்திலும், அந்தந்த இடத்தில் வசிக்கும் பொதுமக்களை உறுப்பினராகக் கொண்ட சில கமிட்டிகளை நியமிக்கவேண்டுமென்று மத்திய உணவு மந்திரி காரியாலயம் 1948 டிசம்பரில் எல்லா சர்க்கார்களுக்கும் யோசனை கூறியிருந்தது.

சர்க்கார் தானியக் களஞ்சியங்களுள்ள ஒவ்வொரு ஸ்தலத்திலும் அந்தந்த பிரமுகர்களைக் கொண்ட பரிசோதனைக் கமிட்டிகளை நியமிப்பது நல்லதென்று உணவு மந்திரி காரியாலயம் இப்பொழுது எல்லா சர்க்கார்களுக்கும் யோசனை கூறியிருக்கிறது. இந்தக்கமிட்டிகளின் அங்கத்தினர்கள் காரியாலய அலுவல் நேரங்களில் களஞ்சியங்களுக்குச் சென்று தானியம் எடுத்துச்செல்லவும், இவர்களுக்கு அதிகாரமிருக்கும் களஞ்சியத்தைப் பார்வையிட்ட பிறகு இவர்கள் தங்கள் அபிப்ராயத்தை மாகாண தலைமைக் காரியாலயத்துக்குத் தெரிவிப்பார்கள். அவர்கள் அவ்விஷயம் பற்றி விசாரித்து உதவிலாகா காரியதரிசிக்கும், தகவல் தெரிவிப்பதுடன் அறிக்கை சமர்ப்பித்த அங்கத்தினருக்கும் பதில் அனுப்புவார்கள். பரிசோதனைக் கமிட்டிகளின் அறிக்கைகள் பற்றி மாகாண, சமஸ்தான சர்க்கார்கள் மாதமாதம் இந்திய சர்க்காருக்கு ஒரு அறிக்கை அனுப்பிவரும். பரிசோதனைக் கமிட்டிகளில், அந்தந்த ஸ்தலத்தைச் சேர்ந்த மாகாண சமஸ்தான சட்டசபை மெம்பர்களும் அங்கத்தினராயிருப்பார்கள்.

அமெரிக்காவிலும் பிறப்பு அதிகரிக்கிறதாம்!

நியூயார்க், ஜன. 20—

அமெரிக்காவில் மக்கள் தொகை 150,000 000 என்னிக்கையைத் தாண்டிவிட்டது. 1910-ல் எத்தனை ஆண்டுகளுக்குப்பின் 200 000-பேர் அதிகரித்திருக்கின்றனர். மாதம் பிறப்புக் கணக்கு சுமார் 200 000 என்று கணக்கிடுகிறது.

1948 ல் யுனைடெட் ஸ்டேட்ஸில் மரண விகிதம் மிகக் குறைவு என்று புள்ளிவிவரங்களிலிருந்து தெரிகிறது. இராஜ்யத்தின் 1948-ல் குறைந்திருந்தபோதிலும், குழந்தைகளுக்கு வரும் வியாதிகள் இளம்பக்கவாதம், நிமோனியா இவை அதிகரித்திருப்பதாகவே கூறப்படுகிறது.

ட்ரூமன் அங்கீகாரத்தைத் துச்சமென மதிக்கிறார் மாசேதுங்

அமெரிக்க அக்கீஸனின் அழுகுரல்!

வாஷிங்டன், ஜன. 20—

மாசேதுங்கின் சீன கம்யூனிஸ்டு சர்க்கார் போக்கிலிருந்து அமெரிக்க சர்க்கார் அங்கீகாரத்தை அது விரும்பவில்லை என்று தெரிவதாக யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்க மந்திரி அக்கீஸன் கூறியிருக்கிறார்.

யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு விரோதமாக மாசேதுங் சில காரியங்களைச் செய்வது ரஷ்யாவைத் திருப்திபடுத்துவதற்காக இருக்கலாம் என்று சில விமர்சகர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். மாசேதுங்கும் அவருடைய சகாக்கள் ஐந்து வாரங்களாகியும் இன்னும் மாஸ்கோவிலேயே இருப்பது இந்த சந்தேகத்தை உறுதிப்படுத்துகிறது.

மாஸ்கோவுடன் உள்ள தகராறு எதையோ தீர்ப்பதற்காகவே ரஷ்யாவைத் தாஜா செய்வதற்காகபீகிங்கிலுள்ள அமெரிக்க கான்ஸலாலயச் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகிறது.

காஷ்மீர் பிரச்னை இழுத்துப் பறித்துக்கொண்டிருக்கிறது!

—(•)—

இந்தியா காலங்கடத்துகிறதென்கிறார் ஆஜாத் காஷ்மீர் தலைவர்!

லண்டன், ஜன. 20—

காஷ்மீர் விஷயம் சம்பந்தமாக லேக்சக்ஸசில் நடந்தது எதுவும் தனக்குப் பிடிக்கவில்லை என்றும், இவ்விஷயம் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறதென்றும், பாதுகாப்பு சபையில் இந்தியா இருப்பதால் இதைக் காலங்கடத்தி வருகிறது என்றும், எவ்வித முடிவுக்கும் வரமுடியாதிருக்கிறதென்றும், இங்கு வந்துள்ள ஆஜாக் காஷ்மீர் தலைவர் சர்தார் இப்ருஹிம்கான் இன்று கூறினார்.

காஷ்மீர் விவகாரத்திலும் தென் கிழக்கு ஆசியா விஷயத்திலும் இப்பொழுது அமெரிக்கர்களிடையே அதிக சிரத்தை காணப்படுகிறதென்றும் காஷ்மீர் தகராறு விஷயம் அவர்களுக்குப் புரியவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜெனரல் மக்நாட்டனுக்கு விஷயம் புரிகிறதென்றும், அவரை எல்லாக் கட்சியினரும் மதித்து நடத்துகின்றனர் என்றும் அவர் கூறுகிறார்.

ஜார்ஜ் மார்ஷலின் போலி மருமகள்

பிரெஞ்சு மாதின் துணிகரம்

பாரிஸ், ஜன. 20—

தான் ஜார்ஜ் மார்ஷலின் மருமகள் என்று கூறி மார்ஷல் திட்ட உதவி சலுகைகளைப்பெற்றுத்தருவதாக ஏமாற்றி பல பிரபலமுதலாளிகளிடமிருந்து பணத்தைச் சுருட்டிய 20 வயதுள்ள பிரெஞ்சு மாது ஹெலன் மே மின் என்பவள் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறாள். இவள் பாரிசிலேயே வசிப்பவள் என்றும் யுனைடெட் ஸ்டேட்ஸுக்கே சென்றதில்லை என்றும் தன் பெயரை லேடி பெட்டி மார்ஷல் என்று மாற்றி வைத்துக் கொண்டிருந்ததாகவும் போலீசார் கூறுகின்றனர். - ஞானோ

ரஷ்யா உதவி

பிராங்கோ நாடுவாரா?

நியூயார்க், ஜன. 20—

ஸ்பெயினுக்கு அமெரிக்காவிடமிருந்து கடன் கிடைக்காவிடில், ஜெனரல் பிராங்கோ ரஷ்யாவின் உதவியை நாடக்கூடும் என்று இங்கு கருதப்படுகிறது.

ஸ்பெயினுக்கு இரண்டு கோடி டாலர் கடன் உதவி அளிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் இன்னும் முடிவடையவில்லை என்றும் லெனின்கிராடிலுள்ள கிரெம்லின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த பிராங்கோ தன் ஏஜெண்டுகளை அனுப்பியிருப்பதாக உறுதியான செய்தி ஒன்று கிடைத்திருப்பதாகவும் 'வாஷிங்டன் டைம்ஸின்' நிருபர் கூறுகிறார். எங்கிருந்தும் கடன் உதவி கிடைக்காவிடில் ஸ்பெயினின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என்று கூறப்படுவதாகத் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 21—1—50 சனிக்கிழமை

உணவுப் பிரச்னை!

நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் உணவுப் பஞ்சம் இப்பொழுது மேலும் நெருக்கடியான ஒருகட்டத்தை அடைந்திருக்கிறது அயல் நாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்வதை நிறுத்தி விடுவது என்று இந்திய அரசியலார் முன்னரே செய்திருந்த ஏற்பாட்டின்படி, இவ்வாண்டு இறக்குமதியை. 40 லட்சம் டன்களிலிருந்து 13 லட்சம் டன்களாகக் குறைத்து விடுவதென அண்மையில் புது டில்லியில் கூடிய உணவு அமைச்சர்கள் மாநாடு முடிவுசெய்திருப்பதாகத் தெரிகிறது.

அயல்நாடுகளிலிருந்து உணவுப் பொருள் இறக்குமதி செய்வதால் பல கோடி ரூபாய் வீணில் செலவிடப்படுகிறது என்பதும், இத் துறையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதே; எனினும், அத்தகைய சிக்கனத்தால நாடு மேலும் நலிவுறாமல் பார்த்துக் கொள்ளவேண்டுவது ஆட்சியாளர் கடன். ஆனல் நமது ஆட்சியாளர் மேற்கொண்டிருக்கும் சிக்கனமுறை, இத்தகைய கடமை உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டதாகத் தென்படவில்லை சென்ற ஆண்டு வரை 40 லட்சம டன்களாக இருந்த இறக்குமதி இவ்வாண்டு திடீரென 13 லட்சம் டன்களாகக் குறைக்கப்படுகிறது. 40கும் 13கும் இடையே உள்ள வேற்றுமை மலைக்கும் மடுவுக்குமிடையே உள்ளது போனறதாகும். இங்ஙனம் பெருத்த அளவில் உணவுப் பொருள் இறக்குமதி குறைக்கப்படுவதால் மககள் மேலும் பஞ்சத்தால் பரதவிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

மாகாணங்களுக்கு இவ்வாண்டு 20 லட்சம் டன்களுக்கு மேல கொடுத்துதவுவதல்லை என மத்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதாம், சென்னையைப் பொறுத்தவரையில் 3லட்சம் டன்களுக்குமேல் உதவி கிடைக்காது என்று திட்டமாகத் தெரியவருகிறது. சென்ற ஆண்டு வரை 5 லட்சம் டன்கள் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே, சென்னை தன்னுடைய தேவையைப் பூர்த்திசெய்துகொள்ள வேண்டுமானல், இவ்வாண்டு 2 லட்சம் டனகள் அதிகமாக உற்பத்தி செய்தாகவேண்டும். அங்ஙனம் அதிக உற்பத்தி செய்வதற்குவேண்டிய ஊக்கமும் வசதியும் சென்னைக்கு அளிக்கப்படுகிறதாவென்றால்; அதுதானில்லை; முன்னரே சென்னை மற்ற மாகாணங்களை விட பொருளாதாரத் துறையில மிகமிக பிறபோக்கான நிலையிலே உள்ளது, இந்நிலையில்லை இங்கு விவசாயம் செழித்து, இம் மாகாணம் தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் நிலையை அடையும் என்று எங்ஙனம் எதிர்பார்க்கமுடியும்?

இங்ஙனம் மாகாணங்கள் சுயதேவையைப்பூர்த்திசெய்து கொள்ள முடியாத நிலைமை ஒரு புறம் மத்தி அரசாங்கத்தின் கைவரிப்பு ஒரு புறம் என்ற நிலைமை இருக்கும் போது உணவு பொருள் இறக்குமதியும் பெருத்த அளவு குறைக்கப் படுவதால் அன்னவிசாரம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

விளையாட்டிலும் 'ஒதுக்கப்பட்டோர்'!

புது டெல்லியில் தேசிய விளையாட்டு மைதானக் கட்டிடக்கல் நாட்டு விழாவில் கடந்த வியாழனன்று சொற்பொழிவாற்றியிருக்கும் பண்டிதநேரு அவர்கள் குறிப்பிடத்தக்ககருத்தொன்றை வெளியிட்டுள்ளார். 'விளையாட்டு மைதானமென்பது வெறும் பணக்காரர்களுடைய சொத்தாக மட்டுமிருக்கக்கூடாது ஒரு சிலர் அவ்வப்போது பயன் படுத்திக் கொள்வதற்காகவேத்தான் இம் மைதானமென்றால் இதற்கு இத்துணை பெருந்தடபுடல்கள் தேவையில்லை. பெரும் நகரங்களிலே யன்றி நாட்டுப்புற சிற்றூர்களிலும் வதியும் மக்கள் பல்லோருடையவும் விளையாட்டுத்திறன் தரமும், உடல் நல மேம்பாட்டுத் தரமும் உயர உண்மையான பயிற்சி நிலையமாகத் திகழ வேண்டும் இது போன்ற மைதானங்கள்,' பிரதம மந்திரி பண்டித நேருவின் இக் கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறோம், சரியான இடத்தில் தக்கப்படி கருத்துரை வழங்கியமைக்குப் பாராட்டுகிறோம்,

இந்நாட்டைப் பொறுத்த வரையில் விளையாட்டுகள், 'ஸ்போர்ட்ஸ்கள்' எனப்படுபவை பணக்காரர்களும் படித்த ஒரு சிலரும் மட்டுமே கலந்துகொண்டு தங்கள் திறமையைக் காட்டிக்கொள்ள சாதனங்களாக இருக்கின்றன எனபதோடுமட்டுமென்றி, அவற்றைச் சென்று பார்வையிட்டு மகிழ்வும், ஊக்கமும் பெறும் வாய்ப்புக்கூட சாதாரண மக்களுக்குக் கிட்ட வகையில்லாமலிருந்து வருகிறது. இந்நாட்டவர்க்கு எவ்வகையிலும் ஏலாத பற்பல விளையாட்டுகள் இங்கு தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடப்படுகின்றன வென்பது பற்பலருடையவும் கருத்தாயிருப்பதை மறுக்கமுடியாது. உடற்கட்டும் நற்றிறனும் பெருவலியுமிக்க நம் நாட்டுப் பெருவாரி இள வாலிபர்களுக்குக் கிரிக்கெட், ஹாக்கி போன்ற விளையாட்டுகள் கோலிக்குண்டாட்டத்தைவிடச் சாதாரணதானவையே யெனினும், இவ் விளையாட்டுகள் இன்று ஒரு சில பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்த — செல்வாக்குள்ள வட்டாரங்களைச் சார்ந்த — வாலிபர்களின் ஏகபோக உரிமையாகவே இருந்துவருதலைக்காண்கிறோம் ஆதிக்க வகுப்பாருக்கே வாழ்க்கை முறையிலிருப்பதை யொத்து, இத்தகு விளையாட்டு முறையிலும் ஒதுக்கப்பட்ட வகுப்பார் என்று பெருவாரி மக்கள் இருப்பது வருந்தத்தக்கதே யாகும். வாய்ப்பும் வசதியும், சரிசமமாக அளிக்கப்பெறும் பட்சத்தில் மேற்படி விளையாட்டுகள் மிகச் சதாரண விளையாட்டுகளாகி விடுமென்பதோடு, இவைகளுக்குக் கட்டணம் போட்டு வசூல் செய்யும் வாய்ப்பு ஏற்படாது போய் விடுமென்பதோடு, இன்று பெரும் ஆட்டக்காரர்களெனப் பல படப்போற்றப் படுவோர் மூலையில் ஒடுங்கி விடுவரென்பது உறுதி!

வருங்காலச் சிற்பிகளாகிய ஆக்க இளைஞர்கள் உடல் நலனும், ஊக்கவன்மையும் ஒரே மதிரியாகப் பெற்று உயர்ந்து விளங்க இவைபோன்ற விளையாட்டுகளில் அவர்களுக்குச் சரி சமவாய்ப்பு அளிக்கப்பெற வேண்டியது இன்றியமையாததாகும்,

தி. மு. க. பற்றி திரு. வி. க.

திராவிட கழகம் எதிர்காலத்தில், எத்துறையில் பணியாற்ற வேண்டுமென்று, யான் எனது உள்ளக் கிடக்கையை ஈரோடு மாநாட்டில் எடுத்துக் கூறினேனே அத்துறையில், இன்று திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டாற்ற முற்பட்டிருப்பது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன்று, சிதறுண்டுகிடக்கும் தொழிலாளரின் மகத்தான சக்தி ஒன்று திரட்டப்பட வேண்டும். நம் நாட்டின் அரசியல் முறை, சோஷியலிஸ - சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட தாய் அமையப்பெற வேண்டும். உழைப்பாளரின் உரிமைபெற்ற ஆட்சி நிறுவ வேண்டும்,

இவ்வகையில், திராவிட முன்னேற்றக் கழகமும் தொண்டாற்ற வேண்டுமென்று பெரிதும் ஆசைப்படுகிறேன்

டெஹ்ரான் பத்திரிகாசிரியர் கைது

டெஹ்ரான், ஜன. 20—

ராணுவத்திற்கு விரோதமாக ஒரு கட்டுரையைப் பிரசுரித்ததாக ஷஹீத் என்ற பத்திரிகை ஆசிரியரும் பிரசுரகர்த்தரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்கள் ராணுவ கோர்ட்டு முன்பு விசாரிக்கப்படுவார்,

அறிவுக் கதிர்!

சுய ஆட்சி நிலையாகவிருக்க வேண்டுமானல், பணக்காரர்களும் இருக்கக் கூடாது; ஏழைகளும் இருக்கக்கூடாது. இருவரும் பொது ஜன நன்மைக்கு விரோதமானவர்கள். பணக்காரர்கள் இரக்கமற்றவர்களாய் இருக்கிறார்கள், ஏழைகள் அந்த இரக்கமற்றவர்களுக்கு நண்பர்களாயிருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்களுக்கு மிடையில பொதுஜன சுதந்திரம் ஏலம் போடப்படுகிறது. பணக்காரர்கள் அதனை வாங்குகிறார்கள். ஏழை அதனை விற்கிறான். —ரூசோ

[கற்பனை உரையாடல் :]

கண்டதும் கேட்டதும்

[சுப்பிரிவோன்]

உரையாடுவோர் : பாலு, துரைராஜ் என்னுமிரு கல்லூரி மாணவர்கள்

இடம் : பூந்தமல்லி ஹைரோட், சென்னை, பச்சையப்பன் கல்லூரிக்கருகில்.

காலம் : காலை, 10 மணி அளவு

பாலு : ஹலோ மிஸ்டர் துரை, என் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாய் காலேஜுக்கு வரவில்லையா!

துரை : (சிகரெட்டைப் பிடித்துபுகைவிட்டுக்கொண்டே) போகணும்!

பாலு : எப்போ போறதா உத்தேசம்!

துரை : அட, சரிதான் நில் அப்பா... போனா போச்சு... அதுக்குள்ளே என்னடா அவசரம். அவசர அவசரமாய் போய் படித்துக் கிழிக்கப் போறியோ!

பாலு : என்னப்பா இன்னைக்கு ஒரு மாதிரியா பேசறே. என்னப்பா காரணம்? அது சரி... அந்தப் பேப்பரைக் கொஞ்சம் இப்படி கொடு. விசேஷமான நியூஸ் ஏதாச்சும் இருக்கா...

துரை: இந்தா (தன் கையிலிருந்த பத்திரிகையை பாலுவிடம் கொடுத்து) பார். ஜனவரி 26 நியூஸ்தான் பிரதானமா இருக்கு. அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டேயிருந்தேன்.

பாலு: அட, அதைப்பற்றி யோசிக்கிறது என்னடா? எல்லாம் தெரிஞ்ச விஷயந்தானே அது ஒரு அரசியல் தீபாவளி! இந்த நாட்டிலெத்தனை அரசியல் தீபாவளிகள் அடிக்கடி நடைபெறுகின்றன. அதிலே இதுவும் ஒன்று! ஆனால் இது ஒரு பெரிய தீபாவளி!

துரை: சபாஷ் நல்லா சொன்னேடா! இதுவும் ஆரியருக்கு ஒரு பண்டிகைதானே.

பாலு: ஆமாம். இந்த பண்டிகைக்கு என்ன பேர் கொடுக்கலாம் சொல்பார்க்கலாம்

துரை: இதென்னடா புதுசான கேள்வியாயிருக்கே! எனக்குத் தெரியாது நீயே சொல்லப்பா.

பாலு: பாசிசத் திருவிழா என்று சொல்லலாமல்லவா!

துரை: ஆமாண்டா பாலு, அதுவும் பொருத்தமான பேருதாண்டா. இத்தனை நாளாக அரசியல் நிர்ணய சபையிலே பாசிசத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. அவற்றையெல்லாம் இந்த ஜனவரி 26-லே அரங்கேற்றப் போகிறார்கள் அவ்வளவுதான். உம், அது சரி, இந்தக் கான்ஸ்டிடியூஷன் எப்படி ஓர்க் பண்ணுமின்னு நீ நெனைக்கிறே.

பாலு : நாசமாப் போச்சு... ஓர்க் பண்றதாவது மண்ணாங்கட்டியாவது, அவங்க வச்சது தான் சட்டம் என்று சொல்லியாருக்க. இப்போ இருக்க கட்டுப்பாடுகளை இன்னும் கொஞ்சம் அதிகமாகும். இப்போ சாதாரணமாக ஒரு நாள் 144 போடுறாங்கள். மூன்று மாதத்துக்கொரு புத்தகம் பறிமுதலாகிறது. 153-வது சட்டம் சர்க்கார் மார்க்கெட்டிலே ரெடியா வச்சிருக்கிறார்கள். குடியரசு ஏற்பட்டபின் இந்தமாதிரி கட்டுப்பாடெல்லாம் கொஞ்சம் அதிகரிக்கும். ஒரு வேளை 144 நிரந்தர சட்டமாகவிட்டாலும் விடலாம். பேசுவது எழுதுவது எல்லாமே குற்றமென்று சொன்னாலும் சொல்லுவாங்க.

துரை : சேச்சே!... என்னதானாலும் இந்த டெமாக்ரஸி காலத்தில் ஒரு அரசாங்கம் அவ்வளவு மோசமா நடந்து கொள்ளுமா?

பாலு : டெமாக்ரஸியாவது மண்ணாங்கட்டியாவது.. அதெல்லாம் ஏட்டோடே சரியப்பா! நாட்டிலே இல்லே. அதுவும் நம்ம நாட்டிலே, அந்தச் சாக்கையே எதிர்பார்க்க முடியாது.

துரை : ஏன்டா அப்படிச் சொல்றே!

பாலு : ஏனென்றும் இங்கே தானேப்பா ஆரிய ஆட்சி நடக்கிறது.

துரை : சரி, அப்படியானால் இதிலே இருந்து மீளும் வழி தான் என்னப்பா?

பாலு : வழியா? துரை, இதென்ன கேள்வி. நீ சரித்திரம் படிச்சதில்லையா?

துரை : படிச்சிருக்கிறேன்...

பாலு : அதிலே எந்த சர்வாதிகார ஆட்சியாவது நிலைத்திருந்ததாகப் படிச்சதுண்டா?

துரை : அப்படியின்னா நீ என்ன தான் சொல்லுகிறாய் பாலு?

பாலு : சொல்றது என்ன. நடக்கிறது நடக்கட்டும். நாடு அதைக் கவனிக்கட்டும். நாமும் கவனித்துக் கொண்டேயிருப்போம். நெருக்கடி வரத்தான், தானே வழி பிறக்கும்.

துரை : சரி, ஜனவரி 26-ம் தேதியைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன. நம்முடைய முன்னேற்றக் கழக அபிப்பிராயம் என்ன?

பாலு: அபிப்பிராயமா? கொஞ்சம் பொறு. நாளைக்கு ஆரம்பமாகும் மாநாட்டுக்குப் போய்விட்டு வருவோம். அப்புறம் பேசிக்கொள்வோம். ஜனவரி 26 ஐப் பற்றி அப்புறம் பேசலாம். ஜனவரி 21, 22 ஐ கவனிப்போம்.

துரை: சரி, சரி, கோமாவுக்கு வா ஒரு கப் டீயின் சாப்பிட்டு வகுப்புக்குப் போவோம். மற்ற விஷயங்களைப் பிறகு பார்த்துக்கொள்வோம்.

வலி தீர்க்கும் மருந்து ஆபத்தானது!

ஜினிவா, ஜன. 20—

வலியைத் தீர்க்கும் மருந்து மிகவும் ஆபத்தானது என்று உலக சுகாதார ஸ்தாபனம் கருதியதால் அதை உற்பத்தி செய்ய அமெரிக்காவின் கம்பெனி ஒன்று ஏற்பாடு செய்ததைக் கைவிட்டுவிட்டது.

தன்மானத் திராவிடத்தை சமதர்மப் பூங்கா ஆக்குவோம்!

வளமும் வழியுமிருக்கும்போது மாற்றுருக்கு மண்டியிடுவதா?

—:(o):—

லட்சியத்தின் மீது நிற்கிறோம்; பிற்போக்குச் சக்திகளை மீற விடோம்!

—(o)—

சென்னை தி. மு. க. மாநாட்டில் தோழர் எஸ். முத்து துவக்கவுரை

21—1—50 அன்று பிற்பகல் ஆரம்பமான சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் ஆற்றிய துவக்கஉரை வருமாறு :—

மாண்புமிக்குடைய தோழர்களே! தோழியர்களே!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நான்கு மாத சாதனைகளில் இரண்டாவதாகக் கூட்டப்படும் இம்மாவட்ட மாநாட்டை மாகாணத்தின் தலைநகரில் கூட்டப்படும் இம்மாநாட்டைத் துவக்கிவைக்கும் பெரும் பணியை எனக்களித்தமைக்கு மாநாட்டு அமைப்பாளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தலைநகரிலே கூட்டப்படும் மாநாட்டிற்கு என்னைத் திறப்பாளராகத் தேர்ந்தெடுத்தமைக்குக் காரணம் எனக்குப் புரியவில்லை. என்னிலும் சிறந்த அறிவாளிகளும் மேதைகளும் இயக்கத்திலே இருக்கின்றபொழுது, எனக்கு இவ்வாய்ப்பை அளித்ததற்கு எனது இயக்கத் தொண்டுதான் காரணமாயிருக்க வேண்டுமென்று நினைக்கின்றேன். யான் இந்தப் பணியைத் திறம்பட முடிப்பேனா என்பதைப் பற்றி நான் அஞ்சியதுண்டு. எனினும் தோழர்களின் கட்டளை எனக்கு சக்தியைக் கொடுத்தது. எனக்குத் தெரிந்த வரையிலே இந்தப் பணியை ஆற்றுகிறேன். கொள்பவற்றைக் கொண்டு, தள்பவற்றைத் தள்ளிப் பயனடைய வேண்டுகின்றேன்.

கொள்கையில் மாற்றமில்லை

யான் தற்போது திராவிடர் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குமுள்ள பேதா பேதங்களையோ, பலப்பரீட்சையையோ அல்லது பெரியாரின் தவறான போக்கையோ பற்றிப் பேசப்போவதில்லை, பேச வேண்டிய அவசியமும் இல்லை. தவறைத் தவறு என்று சொன்னோம். ஒத்துக்கொண்டாரில்லை, மாற்றும்படி கூறினோம்; மறுத்தார். வேறு வழியில்லை எனக் கண்டதும் விலகிவிட்டோம் கண்ணியத்துடன்.

புதிதாக திராவிட முன்னேற்றக்கழகத்தைத் தோற்றுவித்த நாங்கள் பட்டம் பதவிக்காகவோ, தலைமைப் பீடத்திற்காகவோ பிரிந்தோமில்லை. கொள்கைக்காக இயக்கம் கண்டோமே தவிர, தனி மனிதருக்காக அல்ல; கொள்கை சிதைக்கப்பட்டபொழுது, நாங்கள் லட்சியவாதிகள் எனக் கூறிக்கொண்டு அங்கிருக்க முடியாது. எனவே விலகினோம். வேறு முகாம் அமைத்தோம்; ஜஸ்டிஸ்கட்சி திராவிடர்கழகமாக மாறியது-திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகமாகியிருக்கிறது. எந்தக் கொள்கைகளைத் திராவிடக் கழகத்திலிருந்து கூறிக்

கொண்டு வந்தோமோ, அதே கொள்கைகளைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து கூறிவருகிறோம். யாரார் உழைப்பில் திராவிடர் கழகம் உருவெடுத்து வளர்ச்சியடைந்ததோ, அவர்களாலேதான் திராவிட முன்னேற்றக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டது. அன்று திராவிடர் கழகத்திலிருந்து பணியாற்றியவர்கள் தாம் இன்று திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பணியாற்றிவருகிறார்கள். எங்களுடைய உழைப்பில் உருவாகியதுதான் திராவிட கழகம்; எங்களுடைய உழைப்பில் உருவாகியதுதான் ஒரு சில லட்சம் ரூபாய்கள்.

பணம் பயன்பட்டதா?

மதுரை மாநாட்டுப் பந்தல் கொளுத்தப்பட்டு, பல தோழர்கள் தங்கள் உடைமைகளை இழந்தனர். பந்தல்காரர்கள், எலக்ட்ரிக் சாமான்கள் மற்றும் பல கொடுத்து உதவிய நண்பர்களனைவருக்கும் நஷ்டஈடு கொடுக்கவேண்டிய நிலையிலிருந்தோம். எங்கள் கையில் பணமும் இடையாது; தலைவரை அண்டினோம்: தரமுடியாது என மறுத்துவிட்டார்! மாநாட்டையொட்டி கும்பகோணம், ஏரல், ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில் உண்டியல் வைத்தாவது ஏதாவது வசூல் செய்துகொள்ளுகிறோம் என்று தலைவரிடம் அனுமதிகேட்டோம்; மறுத்துவிட்டார். வீடுவீடாய்க் கடைகடையாய் ஏறி நிதி திரட்டி, நஷ்டஈடு கொடுத்தோம். அந்த நிலையில்கூட மதுரை மாவட்டத்தின் சார்பில் 1500 ரூபாய் இயக்கநிதியாகக் கொடுத்தோம் தலைவரிடம். இதனை எதற்காகக் கூறுகிறோமென்றால், இவ்வளவு இக்கட்டானநிலையில்கூட ஒத்துழைத்தோம் இயக்க வளர்ச்சிதடைபடக்கூடாது என்று பாடுபட்டோம். அதற்குப் பலனா? துரோகிகள், வஞ்சகர்கள், சதிகாரர்கள் என்ற பட்டம் பெற்றோம். இவ்வளவு நெருக்கடிக்குப் பின்னர் கொள்கை காற்றில் பறக்கவிடப்படும் பொழுது, அதுவும் உருவாக்கியவராலேயே சிதைக்கப்படும் பொழுது அந்த முகாமிலே இருக்க முடியுமா? எனவே தான் பிரிந்து பணியாற்றி வருகிறோமே தவிர, சொந்தக் காரணமோ சுயநலக்காரணமோ, சதிகார எண்ணமோ அல்ல.

சமதர்மத்தை செழிக்கச் செய்வோம்

இனி நமது வேலை கட்சிப் பிரதி கட்சியல்ல, காரியமாற்றல்தான் நமது வேலைத் திட்டத்திலே கண்ணுங் கருத்துமாயிருந்து செயலாற்றல்! முங்கதைகளைப் பேசிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. சென்றதை விடுத்து நடப்பதை— நடக்க வேண்டியதை நமது லட்சிய நிறைவேற்றத்திற்கான பணியைத் தொடர்ந்துசெய்வோம் அந்த வரையிலே இன்று நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சிய சாதனைக்காகப் பாடுபட முன்வந்துள்ளோம். பாடுபடுவோம் நமது லட்சியம் வெற்றிபெறும் வரை. திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்தது அதன் லட்சிய கீதமான தனித் திராவிட ஆட்சியை விரும்பும் நாம் மாற்றுக் கருத்துக்காரர்களும், குரோத மனப்பான்மை கொண்டவர்களும் கூறுவது போலக் குறுகிய நோக்கம் கொண்டவர்களல்ல, சமதர்ம ஆட்சி தழைக்க வேண்டுமென்று கூறுகின்ற நாம், திராவிடத்திலே மட்டும் தழைக்க வேண்டுமென்று கூறவில்லை திராவிடத்திலே தழைக்கச் செய்வது மட்டுமல்லாமல் உலகெங்கும் தழைக்க வேண்டுமென்று கூறுகிறோம். சமதர்மத்துக்கு எதிராக உலகின் எந்தப் பகுதியிலே யாரார் முதலாளித்வ முகம் அமைத்தாலும் சாடுகிறோம். அடிமைத் தளைகளை அறுத்து வீழ்த்தித் தன்னுரிமை பெறும் எவ்வெ நாடுகளைக் கண்டு மகிழ்கிறோம், வாழ்த்துக்கூறுகிறோம். எனவே நமது நோக்கம் பெரிது. அதை நமது நாட்டளவிலே மாற்றுருவுடைய தலையீடா, ஆக்ரமிப்போ தடைகளோ இல்லாமல் வெற்றிபெறச் செய்ய காரியமாற்ற விரும்புகிறோம்.

வளமிருந்தும் வகையில்லை!

நாட்டின் இன்றையநிலையை நாமறிவோம் உலகமே இன்று இரு முகாம்களாகப் பிரிந்திருக்கிறது. ஒன்று முதலாளித்வ முகாம், மற்றொன்று பாட்டாளிகளின் முகாம். முதலாளித்வ முகாமின் முன்னோடும் பிள்ளையாக அமெரிக்கா திகழ்கிறது. உலகிலுள்ள நாடுகளிலெல்லாம் தனது டாலர்களை வீசி, அவற்றைத் தன் கைக்குள் போட முயற்சித்துக்கொண்டு வெற்றியும் பெற்று வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தையும் அமெரிக்காவிற்கு அடகுவைக்கும் முயற்சி ஆரம்பமாகிவிட்டது. இந்த நிலையிலே புதிய அரசியலமைப்பு அமுலுக்குவந்து நமக்குச் சுதந்திரக் குடியரசு ஜன. 26-ந் தேதி வருகிறது என்ற மகிழ்ச்சியாரவாரம் இன்று கிளப்பப்பட்டிருக்கிறது. ஆனால் நம்மைப் பொருத்தவரையிலே, திராவிடத்தைப் பொருத்தவரையிலே சுதந்திரக் குடியரசு என்பது நமக்கு மகிழ்ச்சியைத் தரமாட்டாது காரணம் சுதந்திரக் குடியரசில் சென்னை மாகாணம்—திராவிடம் ஒரு பஞ்சாயத்து போர்டுக்குரிய அந்தஸ்தைப்பெறும் நிலைமையிலிருக்கிறது. பெருத்த அளவில் மாகாணத்தின் உரிமைகள் பறிக்கப்படுகிறது. புதிய அரசியலமைப்பிலே, ஏற்கனவே நமது நாட்டிலுள்ள வளரக்கூடிய வரிகளனைத்தையும் மத்திய சர்க்காருக்குக் கொட்டிக் கொடுத்துவிட்டு, மடியேந்திப் பிச்சைபோடு என்றுகெஞ்சிக்கேட்டும், முடியாது என்ற பதிலைக் கேட்டு ணமில்லையே, மத்திய சர்க்கார் மறுத்துவிட்டதே என்று முகாரி பாடுகிறார் மந்திரியார். தொழில் துறையிலேயோபின் தங்கி எதற்கும் வடநாட்டை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. பஞ்சாலைகளுக்கு அகமதாபாத், பம்பாய்: இரும்புக்கு டாட்டா என்ற நிலை. ஆக வடநாட்டிற்குத் தென்னாடு மார்க்கெட்டாக இருக்கிறது. வளமில்லாத காரணத்தினாலல்ல, வகையில்லாத காரணத்தினாலுமல்ல. ஏமாளிகளாய், எடுப்பார் கைப்பிள்ளையாய் இருக்கும் காரணத்தால். வடநாட்டைவிடத் திராவிடம் வளத்தில் சிறந்தது. முப்புறமும் கடல்-வற்றாத நதிகள்-வளமிக்க நிலங்கள் தங்கச்சுரங்கம் இரும்பு, நிலக்கரி போன்ற கனிப்பொருள்கள் ஏராளம். மூலப் பொருள்கள் வேண்டியவை இருக்கின்றது. இருந்தும் நாமாக ஒன்றும் செய்ய முடியாது. மத்திய சர்க்காரின் அனுமதி வேண்டும். எனவேதான் வளமும் வழியுமிருக்கும்போது, மாற்றுருக்கு மண்டியிட்டு வாழ் விழக்க வேண்டாம் என்கிறோம். நமது நாட்டை நாமே ஆள்வோம், நாட்டு மக்களுக்கு நல்லது செய்வோம்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

கோவை மாவட்ட தி. மு. கழக

முதல் மாநாடு

29-1-50 ஞாயிறு காலை 9மணிக்கு கணியூர் "அர்ச்சுனன் பந்தலில்" நடைபெறும்

★

என். எஸ். கே. குழுவினரால் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடைபெறும்

தலைவர் :- ப. உ. சண்முகம்
துவக்குபவர் :- ஜி. பி. சோமசுந்தரம்
வரவேற்புத் தலைவர் :- பி. பழனிச்சாமி

★

இரவு 10-மணிக்கு நகைச்சுவை அரசு என். எஸ். கே. அவர்கள் தலைமையில்

— சந்திரமோகன் —

நாடகம் நடைபெறும்

சி. என். ஏ., கே. ஆர். ஆர்., ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் நடிப்பார்கள்

[28—1—50 மாலை 6-மணிக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் விஷயாலோசனைக் கூட்டமாக நடைபெறும்]

மாநாட்டு வரவேற்புக் குழுவினர்.

தன்மானத் திராவிடத்தை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு நாட்டுப் பிரிவினை அவசியம் என்று கூறுகிறோம்.

கூட்டத்தைக் கண்டிக்கவில்லை; கொள்கையைத்தான்

பொருளாதாரத் துறையிலே நாம் சமதர்மக் குடியரசு அமைக்க வேண்டுமென்றுதான் கூறுகிறோம். திராவிடம் சமதர்ம நாடாகத்தான் திகழும்! திராவிடத்திலே முதலாளித்வம் எந்த ரூபத்திலும் அரும்பெடுக்க முடியாது. திராவிட நாட்டுப் பிரிவினை கோரும் நம்மைப் பார்த்து மாற்றுக் கட்சிக்காரர்கள், குறிப்பாக சமதர்மவாதிகள் கூறுகிறார்கள், வடநாட்டு முதலாளித்துவத்தை ஒழித்துத் தென்னாட்டு முதலாளித்துவத்தை வளர்க்கப்போவதாக! நாங்கள் எங்களுடைய பொருளாதாரக் கொள்கை சமதர்மந்தான் என்று அறுதியிட்டுக் கூறிவிட்ட பிறகு, தென்னாட்டு முதலாளித்துவம் எப்படி வளர முடியும்? அல்லது நாங்கள்தான் அதை எப்படி அனுமதிக்கமுடியும்? பொறுமையால் பலர் பலவிதமாகக் கூறலாம். ஆனால் நாம் நமது கொள்கைகளிலே தெளிவும், உறுதியும் கொள்வோம். அந்தத் துறையிலே வெற்றியும் பெறுவோம்.

சமுதாயத் துறையைப் பொருத்தவரையிலே, நாம் சமுதாய சமத்துவம் வேண்டுமென்று கூறுகிறோம். மனிதனை மனிதனாக நடத்தப்பட வேண்டும், சாதியால் மதத்தால் சாத்திரத்தால் மக்களிடையே உயர்வு தாழ்வுகள் கற்பிக்கப்படவோ, அமுல் நடத்தப்படவோ கூடாது என்றுதான் கூறுகிறோம். சாதிப் பாகுபாடுகளுக்கும், சுரண்டலுக்கும் காரணமாயுள்ள தன்மைகளை நாங்கள் கண்டிக்கிறோம். எந்த தனிப்பட்ட நபர்களிடமோ, அல்லது சமூகத்தாரிடமோ எங்களுக்கு வெறுப்போ, குரோதமோ கிடையாது. ஒரு சமூகத்தாரைத் திட்டுவது எங்கள் திட்டமுமல்ல, நாங்கள் கண்டிப்பதெல்லாம் மக்களை ஏமாற்றுகின்ற, மக்கள் உழைப்பிலே உண்டு கொழுக்கின்ற, மக்களைப் பாகுபாடு செய்கின்ற, மக்களைப் பகுத்தறிவற்றவர்களாக்குகின்ற முறையைத் தானே தவிர, ஒரு சமூகத்தாரை அல்ல. அந்த முறையை யார் ஆதரித்தாலும் சரி, அவர்களுக்கு அந்தமுறைக்குத்தான் எங்கள் கண்டனமே தவிர வேறு யாருக்குமல்ல.

போரிட்டுப் புகலிடம் சேருவோம்

இந்த லட்சியங்களைத் தனது இருதய கீதமாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டு வருகிறது. திராவிட முன்னேற்ற கழகத்தாராகிய நாங்கள் பலாத்காரத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களல்ல. நாங்கள் அஹிம்சை அஹிம்சை என்று பேசி, ஆகஸ்டு தனத்தில் இறங்குபவர்களல்ல. எந்த இயக்கம் பலாத்காரத்தில் ஈடுபட்டாலும் அந்த இயக்கம் மக்களிடையே செல்வாக்குப் பெற முடியாது என்பதிலே திடமான நம்பிக்கைக்கொண்டவர்கள் நாங்கள். நாங்கள் எங்கள் கொள்கைகளை அமைதியான முறையில் பிரசாரம் செய்து வருகிறோம்; என்றபோதிலும் ஆட்சிப்பீடத்திலமர்ந்திருக்கும் மந்திரிமார்கள் அனைவரும் எங்கு சென்றாலும் எங்களைக் குறை கூறுவதும், கேலி கேவலம், கிண்டல் பேசுவதுமாயிருக்கிறார்கள். அத்துடன் இருப்பதுமில்லை. எங்கள் மீது அடக்குமுறை 144! 153!— நாடகத் தடை, அச்சகத் தடை, புத்தகத் தடை போன்ற தடை உத்தரவுகளைத் தடை இன்றிப் போட்டு வருகிறார்கள். அடக்குமுறையினால் அழிந்துவிடக்கூடிய கொள்கையல்ல எங்கள் கொள்கை. அடக்குமுறைக்குப் பயந்து இயக்கப் பணியை நிறுத்திவிடக்கூடியவர்களுமல்ல நாங்கள். அடக்குமுறை மூலம், எந்த ஆட்சியும் வெற்றிபெற முடியாது என்பதை உலக வரலாறு பகட்டுகிறது. ஏன், ஆளவந்தார்களுடைய சரித்திரமே அந்த உண்மையை அவர்களுக்குப் புகட்டி இருக்கும். இருந்தபோதிலும், டயரும், நீலனும், ஹிட்லரும், முசோலினியும் சேர்ந்து உருவெடுத்தாற்போல இன்றைய ஆளவந்தார்கள் அடக்குமுறைகளை அவிழ்த்துவிடுவது, அவர்களுடைய வெற்றிக்கு அறிகுறியல்ல என்பதையும், வீழ்ச்சிக்கே வித்தாக அமையும் என்பதையும் வரலாறை உணர்ந்தேனும் தெரிந்துகொள்ள வேண்டும் என ஆட்சியாளர்களை எச்சரிக்கிறோம். எந்த வித அடக்குமுறையினாலும் எங்கள் பணியை நிறுத்திவிட முடியாது என்பதையும் ஆட்சியாளருக்கு அறிவுறுத்த விரும்புகிறோம்.

கடைசியாக, எந்த நன்னோக்கத்தின் பெயரால், எந்த அடிப்படைக்கொள்கைக்காக நாங்கள் பணியாற்ற முன்வந்திருக்கின்றோமோ, அந்த நன்னோக்கத்தின் பெயரால் ஒவ்வொரு திராவிட ஆண் பெண் வாலிபர்களையும் வாருங்கள், வந்து சேருங்கள் சட்டசபையிலே வீற்றிருந்து சட்டைப் பையை நிரப்ப அல்ல. போரிட, போரிட்டுப் புகலிடம் சேர, புகலிடம் சேர்ந்து பின் சந்ததி மானத்தோடு வாழ ஒரு திரு இடத்தைத் தேடித்தர — அந்தத் திராவிடத்தைச் சமதர்மப் பூங்காவாக்க என்று கேட்டுக்கொண்டு, மாநாட்டைத் துவக்கி வைக்கின்றேன்.

வாழ்க வளமார் திராவிடம்

வணக்கம்

இந்தியாவுக்கு உணவு

இந்தியாவிலுள்ள பசியால் வாடும் மக்களுக்கு யுனைடெட் ஸ்டேட்சில் உபரியாக உள்ள கோதுமையைக் கொடுத்து உதவ வேண்டும் என்று, கோல்டன் ரூல் பௌண்டேஷன், பிருந்தாவன ரூரல் ஒர்வீஸ் ஸ்தாபனம் முதலியவை வற்புறுத்தி வருகின்றன. கோல்டன் ரூல் ஸ்தாபனத்தின் நிர்வாகக் கமிட்டித் தலைவர் டேனியல் ஏ. போலிங் ஹேரால்டு டிரிப்யூன் பத்திரிகையில் எழுதுகையில், பல அமெரிக்கர்களிடமிருந்து இந்த உணவு உதவியை அமெரிக்கா அளிக்க வேண்டும் என்று வற்புறுத்தி கடிதங்கள் வருகின்றனவென்று குறிப்பிட்டிருக்கிறார்.

கமாடிடி கிரெடிட் கார்ப்பரேஷன் வசத்தில் 190 600 000 புஷல் கோதுமை இருந்து வருகிறதென்றும், இதன் மதிப்பே 451,722,000 டாலர் என்றும் கூறப்படுகிறது.

பிரான்சு-இத்தாலி பாதை இணைப்பு

ரோம், ஜன. 20—

பிரான்சுக்கும், இத்தாலிக்கும் "மான்ட் பிளான்" மலையைக் குடைந்து ஒரு ரஸ்தா போட பிரான்சு, இத்தாலி, சுவிட்ஸர்லாந்து எஞ்ஜினியர்கள் யோசித்து வருகின்றனர். இதை செய்து முடிக்க 2 ஆண்டுகள் ஆகும் எனக் கூறப்படுகிறது.

அட்லாண்டிக்கைக் கடந்த சிறு படகு

போனஸ்அயர்ஸ், ஜன. 20—

மெகல்லன் என்ற ஒரு சிறு ஜெர்மன் படகு 78 நாட்கள் பிரயாணம் செய்து அட்லாண்டிக்கைக் கடந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இப்படகில் நால்வர் பிரயாணம் செய்தனர். இப்படகு வழியில் லண்ஸார்மாக், கேப் வெர்டி தீவுகள், ரியோ டி ஜனிரோ ஆகிய இடங்களில் மட்டுமே தங்கிச் சென்றதாம்.

தெ. ஆ. இந்தியர் அவதி

முடக்கல் சட்டத்தால் தொல்லைகள் அதிகரிப்பு

ஜோஹனஸ்பர்க், ஜன. 20—

டிசம்பர் 31-ந் தேதியுடன் இடத்தைக் காலி செய்தாக வேண்டுமென்ற கோட்டின் கொடுக்கப்பட்டிருந்தும் 40 இந்தியக் குடும்பத்தினர் வேறு இடம் கிடைக்காததால் காலி செய்யவில்லை. இந்த வீடுகளில் சில இடிந்து விழும் நிலைமையில் இருக்கிறதாம்.

நகர ஐரோப்பியர் அல்லாத விவகார இலாகா மானேஜர் வெனபில்ஸ் ஓர் இந்திய குடித்தனக்காரர்க்கு எழுதியுள்ள கடிதத்தில் தன் இலாகா இந்தியர்களுக்கான வீட்டு வசதி குறித்து சர்வே முடியாதென்றும், இந்தியர்களுக்கென்று இடம் ஒதுக்குவது சாத்தியமல்ல என்றும் கூறியிருக்கிறார்.

ரெவரன்ட் சிகாமணி ஒரு பேட்டியில் இந்தியர்கள் வீடு இல்லாமல் படும் தொல்லை முடக்கல் சட்டத்தினால் இன்னும் அதிகரித்து விட்டதென்றும், இந்தியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்திலாவது அவர்கள் சௌகரியமாக வாழ வழி செய்யாவிட்டால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என்று கூறினார்.

சாக்கடையில் ஹிட்லர் பொம்மை!

பெர்லின், ஜன. 20—

போன் என்ற ஜெர்மன் நகரில் சில நகர சுத்தியாளர் சாக்கடையில் அது அடைக்கும் வேலையில் முனைந்திருந்தனர். அப்பொழுது ஏதோ தட்டுப்படவே, மனித உடல்தானோ என்று அதை வெளியே எடுத்தனர். அது ஹிட்லரின் மார்பளவு பொம்மை உருவமாக இருக்கவே அதை மீண்டும் சாக்கடைக்குள்ளேயே போட்டுவிட்டனர்.

கழக நடவடிக்கைகள்

அய்யலூர் :—14—1—50 மாலை 4 மணிக்கு தி. மு. க. சார்பில் ஒட்டப்பந்தயம், பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டி, இசைப் போட்டி கொடியேற்று விழா முதலியன நடந்தன. போட்டியில் தேறிய மாணவர்கள்.

1 ஓட்டப்பந்தயம் முதல் பரிசு ஆர். கல்யாணசுந்தரம்; 2. பேச்சுப் போட்டி, டி. லக்ஷ்மிசாமி, முதல் பரிசு; 3. எழுத்துப்போட்டி, என். சங்கரன், முதல் பரிசு; 4. இசைப் போட்டி, என்.வி. ராமையா, முதல் பரிசு. சமார் 6 மணிக்கு துணைச்செயலாளர் எம். தங்கவேலு அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார். கழகச் செயலாளர் வி. எம். வேலு பேசிய பிறகு, பரிசுகள் வழங்கப்பட்டது 7-30 மணிக்கு தலைவர் முடிவுரை கூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

சச்சமங்கலம் :—15—1—50-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று இக்கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் க. முத்தையன் தலைமையின் கீழ் நடைபெற்றது. உறுப்பினர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். அப்போது கீழ்க்கண்ட இருதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பொதுக் கூட்டம் நடத்துதல் பற்றிய தீர்மானம் நீண்டநேர ஆலோசனைக்குப் பிறகு அடுத்த கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

2. முத்தீஸ்வரன் மு. அரங்கராசன் ஆகிய இருவரையும் மாவட்டக்கழக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. விளம்பர உறுப்பினர் நன்றிகவில கூட்டம் முடிவுற்றது.

* * *

மதுராந்தகம் :—சோஷலிஸ்டுக் கட்சியில் இருந்த எ. ஆறுமுகம் என்பவர் விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார். காரணம் மேற்படி கட்சியில் அதிக ஊழல் இருப்பதாகவும் தனக்கும் அக்கட்சி கொள்கைக்கும் வேறுபாடிருப்பதாகவும் அறிவிக்கிறார்.

* * *

சென்னை:—புதுப்பேட்டை (31-வது வட்டம்) தி. மு. க. கிளையின் சார்பில் 12-1-50 வியாழன் அன்று மாலை 7 மணிக்கு தோழர் டி. என். ராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், 'புத்தாண்டு செயற்குழு' உறுப்பினர் தேர்வு நடைபெற்று கீழ்காணும் தோழர்களை ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர் பொ. மதிவாணன், துணைச் செயலாளர் கோவிந்தசாமி, பொருள் உறுப்பினர்கள் காதர், மா. வீரராகவன். வி. உறுப்பினர்:- பி. டி. சஞ்சீவி மற்ற செ. கு. உறுப்பினர்கள் பி. டி. சீனிவாசன், டி. என். ராசன், மோகன், அதிரூபன், இராமதுரை; அன்புமுத்து (கழக காப்பாளர்) தேர்ந்தெடுக்கப்பட்டபின், கடந்த ஆண்டு செ. கு. பொறுப்பேற்று நடத்திய தோழர்களுக்கு நன்றி தெரிவித்து கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

வேலூர் :—16—1—50 காலை 9 மணிக்கு கஸ்பா தி. மு. கழகத்தில் திருவள்ளுவர் சொற்பயிற்சிக் கழகத்தின் சார்பில் தோழர் என். அண்ணாமலை அவர்கள் தலைமையில் சொற்பயிற்சி நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் இளஞ்செழியன் வேல வில்லாளன் குப்புசாமி குருநாதன் முதலியோரும் மற்றும் சிலரும் சொற்பொழிவாற்றினர். தோழர் எம். வி. சாரதி அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை மயிலாப்பூர்.—தி. மு. க. திறப்பு விழாவுக்கான வரவு செலவு கணக்குகளை பரிசீலனை செய்ய நிதி உறுப்பினர் தோழர் செல்வராச அவர்கள் தலைமையில் நடந்த கழகக் கூட்டத்தில் துவக்க விழாவாற்றிய காலை ஆன செலவு ரூ. 66—10—9 என்றும், வரவு ரூ. 48—7—6 என்றும் முடிவு செய்ததுடன் அதிகப்படி செலவான தொகை ரூ. 18—3—3ஐ கமிட்டி உறுப்பினர்களின் நன்கொடையைக் கொண்டு ஈடுசெய்வதென தோழர் பொன். கு. கோதண்டபாணி கொண்டு வந்த ஆலோசனைத் தீர்மானத்தையும் கூட்டம் ஏற்றுக்கொண்டது.

* * *

அங்கலக்குறிச்சி:இவ்வூர் தி. மு. க. படிப்பகக்கூட்டம் 11-1-50-ல் எ. கி. மயில்சாமி அவர்களின் தலைமையில் நடந்தேறியது. எ. எஸ். காஜாமைதீன் தி. மு. க.வின் கொள்கைகளைப்பற்றியும், எ. எம். மாணிக்கம் "நாம் யார்" என்பதைப்பற்றியும், எ. கே. பொன்னுசாமி 'கைத்தொழிலின் நிலை"யைப் பற்றியும், எ. டி. நஞ்சப்பன் 'விஞ்ஞானம்" என்பதைப் பற்றியும் பேசினார்கள். தலைமை தாங்கிய எ. கி. மயிலு, திராவிடர் நிலைமைப்பற்றி பேசிவிட்டு, முடிவுரை கூறினார்.

* * *

கடம்பூர்:—இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பாக புத்தாண்டு பொங்கல்விழா கழகக்கட்டிடத்தில் விருந்து மாலை 5-30 மணிக்கு தோழர் மா. க. செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அண்ணாவின் திரு உருவப்படம் தொண்டர்கள் அணிவகுத்து மேளவாத்தியத்துடன், புத்தாண்டுபொங்குக என்ற வாழ்த்தொலியுடன் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாக வந்து தோழர் அ. ரத்தினசாமி அவர்கள் கடையின் முன்னுள்ள கம்பத்தில் நமது இயக்க கொடியைத் தோழர் எம். எஸ். பொன்னுச்சாமி அவர்கள் ஏற்றிவைத்தார்கள். ஊர்வலம் 6 30 மணிக்கு தி மு. கழகம் வந்து சேர்ந்தது. அவ்வமயம் தோழர் வே. மு. மாரியப்பன் அவர்கள் வந்திருந்த பொதுமக்கள் பலபேர்களுக்கும் சர்க்கரையும் பழமும் வழங்கினார்கள்.

* * *

காரைக்குடி :—நகர திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழா வரவு செலவு விபரம்

நன்கொடையாளர்களின் கை ஒப்பமிட்ட ரசீதுப்படி

நன்கொடை வரவு	ரூ.	323-8-0
செலவு	ரூ.	293-1-9
செலவு நீக்க இருப்பு	ரூ.	29-12-3

இந்த ரூபாய் இருபத்தி ஒன்பதும் அணா பன்னிரண்டும் பைசா மூன்றும், பொருளாளர் தோழர் அ. சுப்பு அவர்களிடம் இருக்கிறது.

* * *

பொள்ளாச்சி:—15—1—50-ல் திராவிட முன்னேற்றக்கழகம் (மேற்கு வட்டம் நகர உட்கிளை)யின் செயற்குழுவின் கூட்டம் செயலாளர் தி. ராமசாமி, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இ. வி. கே. சம்பத், டி. கே. சீனிவாசன், ஆகியோர்களை அழைத்து ஓர் பொதுக்கூட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. பின் தோழர். சுப்பிரமணியம் தலைமையில் சொற்பொழிவுப் பயிற்சி நடைபெற்றது. தோழர்கள், கா. மயில்சாமி கி. சோமனி, இரா. ஆறுமுகம், எ. கே. கோவிந்தன், தி. ராமசாமி, துரைமணி, ஆகியோர்கள் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர். பின்பு செயலாளர் நன்றி கூறுதுடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஒரு மனிதன் தேவைக்கே இயக்க மென்ற கருத்தை உதறித்தள்ளினோம்!

படுகுழியில் வீழ மறுத்து வேறு பாதையில் முன்னேறியுள்ளோம்

அஞ்சாநெஞ்சன் அழகிரிமீதாணை, அச்சங்கொள்ளோம் அருங்கொள்கை பரப்ப!

சென்னை முன்னேற்றக் கழக மாநாட்டில் டி. எம். பி. வரவேற்புரை

21—1—50 சனியன்று பிற்பகல் அழகிரி பந்தலில் ஆரம்பமான சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில் தோழர் டி. எம். பார்த்தசாரதி அவர்கள் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:

மாநாட்டுப் பிரதிநிதிகளே! மாண்பு மிக்கத் தோழர்களே!

சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக முதல் மாநாட்டின் வரவேற்புக்குழுவினர் சார்பாக, ஈண்டு குழுமியிருக்கும் உங்கள் அனைவரையும் வருக, வருக எனக் கூறி வரவேற்கிறேன்! என் உளமார்ந்த வணக்கமும், வாழ்த்துகளும் உங்கள் அனைவர்க்கும் உரியனவாகட்டும்!

சென்னை மாவட்டத்தைச் சார்ந்த முன்னேற்றக் கழகத் தோழர்களாகிய நாம், மாநாடாகக் கூடியுள்ளோம் முதன் முதலாகக் கூடியுள்ளோம். முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில், இது இரண்டாவது மாநாடு என்று பெயர் பெறுகின்றது எனினும் சென்னை மாவட்டத்தை நோக்க, நாம் அனைவரும் முதன் முதலாகக் கூடுகிறோம் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது அதுமட்டுமல்லாமல், இன்றைய அரசியல் சூழ்நிலையில் இது ஒரு முக்கியமான மாநாடாகத் திகழ்ந்து, வரலாற்றுச் சிறப்புப் பெறும் நிலையைப் பெற்றிருக்கிறது என்பதை எண்ணும்போது, நான் உள்ளம் பூரிக்கிறேன்.

உண்மை உழைப்பாளிகளின் உறைவிடம்

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி நான்கு மாதங்களே ஆகின்றன எனினும், இந்த நான்கு மாத காலத்தில், அது ஆற்றியிருக்கும் அளப்பரிய தொண்டினை, நீங்கள் முற்றும் உணர்ந்திருக்கிறீர்கள். திராவிடத்தின் — குறிப்பாகத் தமிழகத்தின், திக்கெட்டிலுமுள்ள நாடு நகரங்கள், பட்டிதொட்டிகளிலெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைகள், தம் இருவண்ணக் கரங்களை நீட்டி, இலட்சியத்திற்காகப் போராடும் பண்பு படைத்த திராவிடச் செம்மல்களை, நாள்தோறும் அழைத்தபடி உள்ளன. நீதியிலே நம்பிக்கையும், நேர்மையிலே நாட்டமும், கண்ணியத்திலே கவலையும் கொண்ட பொதுநல உழைப்பாளிகள் பலரும், திராவிட முன்னேற்றக் கழகப் பாசறையின் வீரர் பட்டியலிலே, தம் பெயர்களைப் பொறித்துக் கொள்ள திரண்டு வந்து கொண்டிருக்கின்றனர். அறிவும் ஆற்றலும் படைத்த நமது கழகப் பிரசாரகர்கள், நாடெங்கும் உரிமை முழக்கம் செய்து, வெற்றிப் பவனி வந்த வண்ணமிருக்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகம், உரிமைக்குப் போராடும் —கொள்கைக்காக வாழும்,



உண்மை உழைப்பாளர்களின் உறைவிடம் என்பதை, நாடு நன்கு அறிந்து கொண்டு வருகிறது. வசதியும், வாய்ப்பும் போதுமான அளவுக்கு ஏற்படின், திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடத்தின் ஒருமித்த இதய ஒலியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

முன்னேறி வந்துள்ளோம்

கொள்கையா? அல்லது தலைவரா? — கொள்கை மீது கொண்டிருக்கும் பற்று பெரிதா? அல்லது தலைவர்மீது கொண்டிருக்கும் பாசம் பெரிதா? — கடமை உணர்ச்சியை நிறைவேற்றுவதா? அல்லது கண்மூடித் தனத்திற்கு இரையாவதா—சிந்தித்துச் செயலாற்றுவதா? அல்லது முட்டாள்களாகவே வாழ்வதா?—பலரையும் பற்றி நிற்கும் கொள்கையை இழப்பதா? அல்லது தனித்து நிற்கும் தலைவரை இழப்பதா? என்ற சோதனை, நான்கு மாதங்களுக்குமுன் நம்முன் வைக்கப்பட்டபோது, கொள்கைதான் பெரிது என்று கூறிக், கடமையுணர்ச்சியைச் செயற்படுத்திக் காட்டிய இலட்சிய வீரர்களாகிய நாம் தான் இங்கு கூடியுள்ளோம். நாம் பல வழிகளிலும் முன்னேறிவந்துள்ளோம். சர்வாதிகாரத்தின் கீழ் அடிமைப்பட்டிருந்த நிலைமையிலிருந்து ஜனநாயகத்தில் மகிழ்ச்சியோடு நடமாடும் நிலைக்கு முன்னேறி வந்துள்ளோம்! ஒரு மனிதன் தேவைக்கே இயக்கம் என்ற கருத்தை உதறித்தள்ளிவிட்டு நாட்டின்-பலரின் நன்மைக்கே இயக்கம் என்ற கொள்கையை நிலைநாட்டுவதில் முன்னேறிவந்துள்ளோம்! பணத்திற்கு அடிமையாகி உண்மை உழைப்பாளிகளை உதாசீனம் செய்யும் பிற்போக்கு மனப்பான்மையை வெறுத்து, உண்மை உழைப்பாளிகளை உயர்வளிக்கும் உயரிய முறைக்கு முன்னேறி வந்துள்ளோம்! அமைப்பு முறையால் ஏதும் ஆகாது, என்ற சுயநலப் பொய்யுரையை அப்புறம் தள்ளிவிட்டு, அனைவரின் ஒத்துழைப்பைக் கொண்டு அமையும் அமைப்பு நாட்டிற்கு நன்மை பயக்கும் என்ற உண்மையை நிலைநாட்ட முன்னேறிவந்துள்ளோம்! கற்றறிந்தவர்களால் ஏதும் நடைபெறாது என்ற குருட்டு வாதத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, படித்தவர்களாலேயே உலகம் தழைத்தோங்கிவருகிறது என்ற உறுதி நிலையைத் தெளிவுபடுத்த, முன்னேறிவந்துள்ளோம்! தாய்மை உள்ளம் படைத்த நம் அனைவரையும் வீழ்த்தப் படுகுழியொன்று வெட்டப்பட்ட காலத்திலே, படுகுழியிலே வீழ மறுத்து வேறு பாதை கொண்டு முன்னேறிவந்துள்ளோம்! இப்படிப் பல வகையிலும் முன்னேறிவந்துள்ள நாம், இங்கு கூடியிருக்கிறோம்.

முன்பு கொடுமைகள்—சூதுகள் — வஞ்சகங்கள் — பொறுமைகள் — சூழ்ச்சிகள் — யதேச்சதிகாரங்கள் ஆகிய பலவற்றையும் நாம் சகித்துக் கொண்டோம் கொள்கையின் காரணமாக. கொள்கையும் பறிபோகும் நிலைமை ஏற்பட்ட போதுதான், கீழ்ச் செயல்களுக்கும்அடிமையாகாமல். கொள்கையையும் பறிகொடுத்துவிடாமல், புதிய பாதையை, முன்னேற்றப் பாதையை அமைத்துக்கொண்டோம். இந்த முன்னேற்றப் பாதைஒருவர்,இருவர் முயற்சியல்ல, உண்மை உழைப்பாளிகளின் உரிமை உணர்ச்சியால் அமைந்ததாகும். அந்தப் பாதையைச் செப்பனிடவே நாம் இங்கு திரண்டுள்ளோம்.

அழகிரி இல்லையே!

நாம் கூடியிருப்பது, அஞ்சா நெஞ்சன் அழகசாமியின் நினைவுப் பந்தலின் நிழலிலே. அழகர்சாமி மலைகுலையினும் நிலைகலங்காமல், நாடெங்கும் அறிவியக்கப் பணிபுரிந்து மறைந்த மாவீரராவார். சொல்லாற்றலுக்கும், சோர்வில்லாத் தொண்டிற்கும், வைரம் பாய்ந்த நெஞ்சிற்கும், எடுத்துக்காட்டாக இருந்து வந்த அம்மாவீரனின் பெயர் நமக்கு ஆறுதலையும்,புத்துணர்ச்சியையும் அளிப்பதாக அமைந்துள்ளது. அவர் மரணப்படுக்கையிலே கிடந்து உழலும்போது அவரது உழைப்பைப் பல காலமாகப் பங்குபோட்டுக் கொண்டுவந்த இயக்கம், திரும்பிப் பார்க்க மறுத்துவிட்டது இயக்கத்திலே சேர்த்து வைக்கப்பட்டிருந்த பணம் அவ்வஞ்சாநெஞ்சனின் உயிரை காப்பாற்றிவைக்கப் பயன்படவில்லை, மரணப் படுக்கையில் சிறிது ஆறுதலோடாவது அவர் தமது இறுதி மூச்சை விடுவதற்கு முக்கிய காரணமாக இருந்து, தன்னாலான உதவியைச் செய்துவந்த அறிஞர் அண்ணாத்துரை அவர்களை, அழகசாமியின் குடும்பத்தினரோ, இயக்கமோ எளிதில் மறந்துவிட முடியாது மறைக்கப் பார்ப்பார்கள் சிலர், எனினும், அவர்களாலும் மறக்கமுடியாது இன்று நமது திராவிட முன்னேற்றக் கழகம், சீரும், சிறப்பும் பெற்று அமைப்பு முறையோடு அமைந்திருப்பதைப் போல, அழகிய முறையில் கழகத்தின் போக்கைக் காண, அவர் மரணப் படுக்கையிலே கூட துடிதுடித்துக்கொண்டிருந்தார். மரணப் படுக்கையிலும், குற்றப் பத்திரிகை வாசிப்பதையே கொள்கையாகக் கொண்ட தலைவரின் போக்கு அவருக்குப் பிடிப்பதில்லை என்றாலும், கொள்கைக்காக நாம எப்படி குணங்களைச் சகித்துக்கொண்டு வாழ்ந்தோமோ, அப்படித்தான் அழகர்சாமியும்வாழ்ந்து வந்தவராவார். நமக்கெல்லாம் வழிகாட்டியாக - முன்னோடும் பிள்ளையாக இருந்த அவர், இப்பொழுது உயிருடன் இருந்து, நமது அருந்தொண்டைக் கண்டு மகிழ்வதற்கில்லாமல் போய்விட்டதே என்பதை எண்ணும்போது, துக்கம் நெஞ்சைப் பிளக்கிறது. நாம், கொண்ட கொள்கையை நிறைவேற்றி வைப்பதில், அச்சங்கொள்ளமாட்டோம், என்பதன் அறிகுறியாக, அஞ்சா நெஞ்சன் அழகர்சாமியின் நினைவு விளங்குவதாக!

திராவிடத்தின் எதிர்காலம்...?

நாம் நெருக்கடியான சூழ்நிலையில் கூடியிருக்கிறோம். தென் கிழக்கு ஆசியாவில் ஏறி வரும் சிகப்பு நிறம், இந்தியத் துணைக் கண்டத்திலும் பரவுமா என்ற அச்சம், ஆளவந்தார்களுக்கு ஏற்பட்டிருக்கிறது அந்த அச்சத்தினின்று ஆறுதல் பெறவும், இழந்த செல்வாக்கை இருப்பதாகக் காட்டிக் கொள்ளவும் பிரிட்டன் காமன்வெல்த் நாடகம் நடத்திக் காண்பித்துள்ளது. அமெரிக்கா, டாலர் மழையைப் பொழிந்து, அதனின்றும் அறுவடை காணலாமா என்று எண்ணிக் கொண்டிருக்கிறது அமெரிக்கா-பிரிட்டனின் நேரடிப் பார்வையும், ரஷ்யாவின் மறைமுகப் பார்வையும் வீழ இந்தியத் துணைக் கண்டம் அவற்றினிடையே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. அடுத்து ஒரு உலகப் போர் மூண்டு, அதில் ரஷ்யாவும்—அமெரிக்கவும் வேறு வேறு முகாம்களில் நின்று முக்கியமாகப் போரிடும் நிலைமை ஏற்பட்டால், அமெரிக்காவுக்குத் தன் அணைப்பைத் தருகிற வகையில், இந்தியா தன் பாதையை வகுத்துச் செல்கிறது. வடநாட்டு முதலாளிகளும், அமெரிக்க முதலாளிகளும் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களுக்குத் திராவிடம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அடிமைப்பட்டுத் தீர வேண்டிய அவசியத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அகில உலக அரசியல் சூழ்நிலையில் திராவிடம் பெறும் நிலை இதுதான். திராவிடம் என்றென்றும் அடிமைப்பட்டுத்தான் கிடக்குமோ? அல்லது சீனா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளைப் பின்பற்றித் தன்னாட்சி கொள்ளும் தனி நிலமாக மாறுகிறதா? தெரியவில்லை. இன்பத் திராவிடத்துக்காகக் கனவு கண்டுகொண்டிருக்கும் நாம் ஆற்றிக்காட்டப்போகும் செயல்களைப் பொறுத்திருக்கிறது திராவிடத்தின் எதிர்காலம்.

—:(தொடரும்):—

தி. மு. க. பொதுக் கூட்டங்கள்

22—1—50

திண்டுக்கல் :—	டி. கே. சீனிவாசன், என். எஸ். இளங்கோ
சென்னை :—	சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு
திருவத்திபுரம் :—	பொன்னம்பலனார்

23—1—50

திருவத்திபுரம் :—	கவிஞர் பாரதிதாசன், டி. கே. சீனிவாசன்
இராசமடம் :—	என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. வி. திராவிடமணி, ஏ. சாவித்திரி

24—1—50

திருவத்திபுரம் :—	சி. என். அண்ணாத்துரை காஞ்சி. கல்யாணசுந்தரம்

பொங்கல் விழா :: கூட்டங்கள்

பழனி

பழனி, ஜன. 18—

14—1—50ம் தேதி பொங்கலன்று காலை 11-மணி அளவிற்கு தி. மு. கழகக் கட்டிடத்தில் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் "கொடியேற்றுவிழா" சிறப்புற நடந்தேறியது. விழாவிற்கு தோழர் பா. கோவிந்தராசு தலைமை வகித்தார். தோழர் அ. தமிழரசு நாட்டுப் பண் இசைத்தபின் கழகச் செயலாளர் தோழர் இல. பழனிச்சாமி தி. மு. க. கொடியை ஏற்றுவித்துப் பேசினார். பிறகு கொடியின் தத்துவம் பற்றி தோழர்கள். கா. வெங்கடாசலம், அ. தமிழரசு ஆகியோர் விரிவாகப் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது முடிந்தது.

திருச்சி

திருச்சி, ஜன. 19—

15—1—50 ஞாயிறு மாலை 6-மணிக்கு மார்சக் பேட்டைத் தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் ஆர். மிராண்டின் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் டி. டி. தாஸ், மகிபாலத்தம், அருந்த கணேசன் ஆகியோர் "பொங்கல் விழா" என்பதைப்பற்றிவிரிவாகப்பேசினார்கள்.

பொள்ளாச்சி

பொள்ளாச்சி ஜன 19—

பொங்கல் விழாவை முன்னிட்டு திராவிட முன்னேற்ற வாலிபர் கழகத்தில் 15—1—50 ஞாயிறு காலை 10 மணி முதல் சித்திரப் போட்டியும், இசைப்போட்டியும், 12-30 மணிவரை நடைபெற்றது, விழா, தோழர் ஏ, ஈ. கிருட்டிணசாமி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, மாப்பட்டைத்தோழர் இரா. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை 3 மணிக்கு பேச்சுப்போட்டி தோழர் பி. நடராச (பொதுக்குழு உறுப்பினர்) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஓவியக்கோவை விருதுநகர் அரக்கோணம், கொல்லை முதலிய வெளியூர்களிலிருந்தும் போட்டிக்கு வந்திருந்தன. மூன்று போட்டிகட்கும் பரிசிலனையாளர்களாக—தோழர்கள் பி. நடராச, இரா. பாண்டியன் க, சுந்தசாமி, க. சின்னத்துரை, இளங்கோவன் எம். கே. பாலா, சந்திரராசன் பா. ஜாபர்உசேன் ஆகியோர் பணியாற்றினர். துவக்கத்தில்பொங்கல் விழா பற்றி பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். சித்திரப் போட்டியில் தோழர்கள் டி. எஸ். விக்கப்பா, சொல்லம் ப. விசுவநாதன் க, ராமநாதன் ஆகியோருக்கும், இசைப்போட்டியில் கோட்டூர் தோழர் எம். கே. சைகால், இரா. சுப்பிரமணியம், சிறுமி, க. சுந்தரி ஆகியோருக்கும், பேச்சுப்போட்டியில் தோழர்கள் வெள்ளியங்கிரி, இரா. சுப்பிரமணியம், க. சுப்பிரமணியம் ஆகியோருக்கும் முறையே 1, 2. 3. பரிசுகளும் நற்சான்று மடலும் தலைவரால் வழங்கப்பட்டபின், நிகழ்ச்சியில் கலந்துகொண்ட எல்லோருக்கும் செயலாளர் அ. ச. பாலு நன்றிகூறி விழா முடிவுற்றது.

விருதுநகர்

விருதுநகர், ஜன. 19—

14-1-50 சனிக்கிழமை மாலை 7-30 மணிக்கு நடைபெற்ற பொங்கல் விழாக்கூட்டத்தில், தோழர் எஸ். உத்தண்டன் தலைமையில் தோழர் ஏ. பி, ரத்தினம், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி அவர்களும் பேசினார்கள். தோழர் இராமசாமி பேசியபோது குறிப்பிட்டதாவது: ஆரிய பண்டிகையாம் தீபாவளியை கொண்டாடிய மக்கள் இப்பொழுதைத் திருநாளை கொண்டாடும் அளவிற்கு விழிப்புற்றார்கள். காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டிடையே செய்திருக்கும் தீவிர பிரச்சாரமாகும் என்று கூறி ஆரிய பண்டிகைகளின் பண்புகளை விளக்கிக்காட்டினார்,

15-1-50 ஞாயிறு மாலை 7 30 மணிக்கு மறுபடியும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. நகரசபைத் துணைத்தலைவர் உ. இராமமான் தலைமையில் விருதை இளஞ்செழியன், ஆர். செநீசன் ஆகியோரும் பேசினார்கள். இளஞ்செழியன் பேசியபோது, மதமொருதிருவிழா கொண்டாடும் இந்நாட்டில் தைநாள் கொண்டாடும் முக்கியத்தைப் பற்றியும், இந்தசம்பர் விவசாயிகளைப் பாதிக்கும் கட்டாய உடன்படிசோதா எவ்வளவு படுமோசமான செயல் என்பதைப்பற்றியும் அப்படி பாட்டாளி உழைப்பில் வரும் வரிப்பணத்தில் அரசாங்கத்தாரின் ஆடம்பர செலவுபற்றியும் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய தோழர் ஆர். செநீசன் பேசுகையில் அகில உலகில் பாட்டாளிகள் திருநாள் பிரான்சு, ரஷ்யாவிலும் தமிழ்நாட்டிலும்தான் கொண்டாடப்படுகிறது அந்த நாள்தான் தைநாள் என்றும் சமுதாயபேதம் ஒழிந்து, பொருளாதாரம் சமப்பெற்று, சமிபலம் தனிநாடு கொண்டாலும்தான் அது உண்மை விழாவாக திராவிடத்தில் இருக்கமுடியுமென்று மற்றநாடுகளுடன்ஒப்பிட்டுக் கூறிமுடித்தார்.

பிறகு இத் திருநாளைபோட்டி நடந்த கட்டுரை, சித்திர, சொற்பொழிவுப் போட்டிகளில் கலந்துகொண்டவர்களுக்கு இசைப் புத்தகங்கள் பரிசு அளிக்கப்பட்டன. இந்தப் போட்டிகளில் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் பெரும்பாலும்கலந்துகொண்டனர். இவர்களில் திராவிடப் பிரிவினையைப்பற்றி முக்கியமாகபெண்கள் விமர்சனம் செய்ததைப்பொது மக்கள் பாராட்டினர். பிறகு தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிதுமுடிந்தது.

* * *

சந்நாசிநல்லூர்

சந்நாசிநல்லூர், ஜன. 18—

இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின்சார்பில் ஜனவரி 14, 15 16, 17 ஆகிய நாட்களில் இயல், இசை நாடகத் திருநாட்களும், தி. மு. க. பொதுக் கூட்டமும் நடைப்பெற்றது. தோழர்கள் இரா. பொன்னுசாமி. பெ. வணங்காமுடி சொ இராமசாமி, இ. பொன்னம்பலம் ஆகியோர் தலைமை தாங்கினார்கள் நான்கு நாட்களிலும் தோழர்கள் இரா. சுப்பிரமணியன், வே. கோவிந்தசாமி, பெ. வணங்காமுடி, தமிழரசன், இருட்டணசாமி, இரா. அரங்கசாமி கோ. இளங்கோவன், இரா. இளஞ்செழியன், சு. சதாசிவம், து. தங்கராசு, நக்கீரன், அ. இராமநாதன். ப. பொன்னுசாமி, குயிலினி, கோ. மருதமுத்து. கோ.நெடுஞ்செழியன் ஆகியோர்களால்கழகக்கொள்கைப் பற்றியும் முத்தமிழன் உயர்வைப் பற்றியும் பொங்கல் புதுநாள் பற்றியும் பேசப்பட்டது.

"நீதிதேவன் மயக்கம்" என்ற நாடகம் உரையாடலாக நடத்திக் காண்பிக்கப்பட்டது.

அறிவிப்பு

ஈரோட்டிற்கு நமது "மாலை மணி" விற்பனையாளராகக் கீழ்க்கண்ட தோழர் நியமிக்கப் பட்டுள்ளார்.

இரா. பெருமாள்,
கனையக்கார வீதி, ஈரோடு.

நிர்வாகி 'மாலை மணி,'

சென்னை மாநாட்டில்

அவதூறு வழக்கு 0—3—0
(K. A. மதியழகன் B.A.)

வாழமுடியாதவர்கள் 0—12—0
(மு. கருணாநிதி)

தேவ லீலைகள் (C.N.A.) 0—8—0

மற்றும் எல்லா நூல்களும் எமது கடையில்
சென்னை மாநாட்டில் கிடைக்கும்

முன்னேற்றப் பண்ணை 2/122 பிராட்வே, சென்னை-1.

மதத்தின்...

[1-ம் பக்கம் தொடர்ச்சி]

அவர்களைத் தன்புறுத்துவதாகிய இந்த முரண்பாடு கம்யூனிஸ்டுகளின் தந்திரோபாயங்களில் ஒரு பாகமாகும்.

மதத்தைப் படிப்படியாக குரல்வளையைப் பிடித்து நசுக்குவதுதானிந்தக் கொள்கையின் அந்தரங்க நோக்கம்."

பர்மாவில் நடைபெறும் கலவரங்களுக்கும் உள்நாட்டுப் போருக்கும். இந்தோனேஷியாவில் ஏற்பட்ட புரட்சிக்கும், கொரியா தொடர்ந்து பிளவுண்டிருப்பதற்கும், இந்தோ-சீனாவில் உள்நாட்டுச் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கும் கம்யூனிஸ்டுகள்தான் பொறுப்பாளிகளென்று வத்திகான் அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஆசியாவில் கம்யூனிஸத்தைத் தடுத்து நிறுத்துவதில் இந்தியாவும் ஜப்பானும் பேருதவி செய்யுமென்று வத்திக்கான் எதிர்பார்க்கிறது. வத்திக்கானுக்கும் இவ்விரு நாடுகளுக்குமிடையே இப்பொழுது நல்லுறவு நிலவுகிறது இவ்வளவு சௌஜன்யமான உறவு சரித்திரத்தில் இதற்கு முன்பு இருந்ததே கிடையாது.

இனி நடப்பவை

விருதுநகர்:- விருதைத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழா பற்றி ஆலோசிக்க வேண்டி மேற்படி கழகத்தின் செயற்குழுக்கூட்டம், 23—1—50 திங்கள் மாலை 5 மணிக்கு நடைபெறும். உறுப்பினரனைவரும் தவறாது வரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை மாணவர் மன்றத்தின் 13-வது ஆண்டு நிறைவு விழா, 22-1-50 ஞாயிறு பிற்பகல் 3 30 மணிக்கு சென்னை 'மெமோரியல்' மண்டபத்தில் நடைபெறும்.

டாக்டர் பி. நடராசன் எம். ஏ. டி. லிட் தலைமை வகிப்பார். இசை வேந்தர் எம். கே. தியாகராச பாகவதர் பரிசுகள் வழங்குவார். தமிழ்ப் பெரியார் திரு. வி. க., 'கல்கி' ஆசிரியர் தோழர் ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பரிசு பெற்ற மாணவ, மாணவியருக்கு வாழ்த்துரை வழங்குவர்.

கட்டாய கோதுமை ரேஷன் எடுபடுகிறது

சென்னை, ஜன. 20

இப்பொழுது சென்னை மாகாணத்தில் ஒவ்வொரு அரிசி ரேஷன் கார்டு வைத்திருப்பவர்கள் கட்டாயமாக கோதுமையையும் வாங்க வேண்டுமென்று இருந்து வரும் ஏற்பாட்டை இம்மாதம், 22-ந்தேதி முதல் எடுத்துவிடலாம் என்று ரெவின்யூ போர்டு சிபார்சு செய்துள்ளதாகவும், அதை சர்க்கார் அங்கீகரித்துவிட்டதாகவும் தெரிய வருகிறது.

சுடாத நெருப்பு
(கவிதைகள்)
ஆசிரியர்: "ரவி"
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முன்னுரையுடன்
விலை பிரதி ரூ. 1—4—0
விற்பனையாளர்களுக்கு 25% கழிவு.
—: கிடைக்குமிடங்கள் :—
1. தமிழ்ப்பொழில், 31, சிம்மக்கல், மதுரை.
2. ம. சுந்தரம், Y. M. C. A. Boy's Town, (Near Fort Station)
சென்னைமாநாட்டுப்பந்தலில்கிடைக்கும்

தி. மு. கழகம்
❖
இதுவரை தழைத்துள்ள கிளைகள்
❋
414

பொழுதுபோக்கு

தமிழ்

பிராட்வே	—	பொன்முடி
சன்	—	,,
சரஸ்வதி	—	,,
மஹாராணி	—	வாழ்க்கை
பாரகன்	—	,,
லட்சுமி	—	,,
திருமகள் (சைதை)		,,
வெலிங்டன்	—	அபூர்வ சகோதரர்கள்
கிரௌன்	—	கிருஷ்ணவிஜயம்
கெயிட்டி	—	,,
கஸ்லி	—	வளக்கொடி
நியூ சென்ட்ரல்		பிரபாவதி
சயானி	—	மாயக் குதிரை

ஆங்கிலம்

Minerva	—	Illegal Entry
Casino	—	Joan of Arc
New Globe	—	Topho'the Morning
New Elphinstone	—	The Prince and the Pauper
Midland	—	The Three Musketeers
Roxy	—	Urubu

ஹிந்தி

அசோக்	—	அந்தாஜ்
சித்திரா	—	சமூன்
ஸ்டார்	—	சேனுய்
செலக்ட்	—	டாக் பங்களா
சாகர்	—	ஜான் பீச்சன்
பிரபாத்	—	அமாரி மஞ்சில்

புதிய நூல்கள்!
மக்கள் மறுமலர்ச்சி 0-3-0
(நெடுஞ்செழியன்)
ஏ, சதிகார சமுதாயமே! 0-2-0
அண்ணாவின் அறிவுரைகள் 0-3-0
அண்ணாவின் அடுக்குத்தொடர் 0-3-0
கழிவு 25%. செலவு இனாம்
சென்னை மாநாட்டில் கிடைக்கும்
வள்ளுவர் பண்ணை,
102, அங்காளம்மன்கோவில் தெரு,
சென்னை—7.

வானொலி

(22-1-50 ஞாயிற்றுக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 பாப்பா மலர்

பிற்பகல்:
1-00 டி. வசந்தா, டி. விமலா—நாட்டியம்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்

மாலை:
4-00 சதங்கம் (இசைத்தட்டு)
5-30 எம். ஆர். சங்கரமூர்த்தி—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6.15 ஜி. பொன்னம்மா—பாட்டு
6 45 கே. வி. கிருஷ்ணன்-பாட்டு

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-00 சாவித்திரி சீனிவாசன்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 வி. ராமரத்னம்—பாட்டு
10-30 முடிவு

* * *

திருச்சி

[395·3 மீட்டர்கள்]

காலை:
7-15 தமிழில் செய்திகள்
7-30 டி. எம். சௌந்தரராசன்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-30 இரு வீணைகள்

பிற்பகல்:
12-00 சதம்பம் (இசைத்தட்டு)
1-00 மணிமலர்
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 ஏ. கே. சின்னகிருஷ்ண நாயுடு கோஷ்டி பாண்ட் (ஒலிப்பதிவு) சேட கோபால் வாத்யகோஷ்டி ஒலிப்பதிவு
2-00 தமிழில் செய்திகள்
2-10 பெண்ணுலகம்
3-30 நீங்கள் கேட்டவை (இ. த.)

மாலை:
5 00 டி. எம். சௌந்தரராசன்—பாட்டு
5-40 இரு வீணைகள்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 என். ஆர். தர்மராஜுலு—கிளாரினெட்
6-30 கிராம செய்திகள்

இரவு:
7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
8-00 அனந்தலட்சுமி, சடகோபன்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 என். ஆர். தர்மராஜுலு—கிளாரினெட்
9-35 இசைவேளை(இசைத்தட்டு)
10-00 முடிவு

Printed & Published by T. M. Parthasarathy (Tel : 4502) at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street Madras-1.